Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தில்லானா - இசையிலும், நடனத்திலும்.

**ச.ரம்யா, & முனைவர் அம்பிகா காமேஷ்வர்,**
**இசைத்துறை, முனைவர் பட்டபடிப்பு பிரிவு**
**வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை - 600117.**

**ஆய்வின் நோக்கம்**

இசையின் வடிவங்களில் தில்லானா என்னும் வடிவம் மிகவும் புகழ்பெற்ற வடிவம் இவ்வடிவம் இசையில் மட்டுமல்லாது நாட்டியத்திலும் காணப்படுகிறது பல இசை வாக்கேயர்கள் தங்களின் திறனை வெளிக்காட்டும் வடிவமாக தில்லானா என்னும் இசை வடிவத்தை இயற்றியுள்ளார்கள் அப்படிப்பட்ட பெருமைமிக்க தில்லானா என்னும் இசை படிவம் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்

**திறவுச்சொற்கள்:**

தில்லானா, ஜதி, சொற்கட்டு, நாட்டியம், தரணா, பதம், இசை.

**ஆய்வுச்சுருக்கம்**

இசை அரங்கேற்றம் ஆயினும் நாட்டிய அரங்கேற்றம் ஆயினும் அந்த நிகழ்ச்சியில் மக்கள் அதிகம் எதிர்பார்ப்பது தில்லானா என்னும் இசை வடிவத்தையே இந்த இசை வடிவம் ராகத்தின் பாவம் கொடுக்கும் வடிவம் அது போல நாட்டிய ஜதிக்கு ஏற்ப சொற்கட்டுகள் நிறைந்த இசை வடிவம் இந்த இசை வடிவத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டி ஆராய்வதே இந்த ஆய்வாகிறது

**முன்னுரை**

உலகின் புகழ் பெற்ற கலைகளில் நமது தமிழ்நாட்டின் சிறப்பினைப் பறைசாற்றும் இரு கலைகள் இசைக் கலையும், பரத கலையும் ஆகும். நம் நாட்டில் பழங்காலத்தில் இருந்தே ஆடல்கலையும் பாடல்கலையும் இணைந்தே வளர்க்கப்பட்டு வந்துள்ளது. நீண்ட வரலாற்றினைக் கொண்ட இவ்விரண்டு கலைகளும் காலத்திக்கேற்ப பல மாற்றங்களை சந்தித்து இன்று முழுமையாக வளர்ச்சி அடைந்து உலகத்தாரால் போற்றப்படுகிறது. சான்றோர்களால் இவை கல்பித்தம் மற்றும் அரங்கேற்ற உருப்படி என்று முறையாக பகுக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு, அரங்கேற்றப்படுகிறது. அப்படியாக வகுக்கப்பட்ட உருப்படிகளில் காணப்படும் ஒரு பிரபலமான இசை மற்றும் நடன உருப்படி தில்லானா.

**தில்லானா**

ஒரு சம்பிரதாய இசைக் கச்சேரியிலோ அல்லது நடன கச்சேரியலோ இறுதியாக பாடப்படும் உருப்படியே தில்லானா எனப்படுகிறது. இந்த தில்லானா "தரணா" என்னும் வட இந்திய உருப்படியிலிருந்து தோன்றியதாகவும் கூறப்படுகிறது. (1) . பொதுவில் இந்த இசை வடிவம் ஆடுபவரக்கும், பாடுபவர்க்கும், பார்வையாளர்களுக்கும் மகிழ்ச்சியும் உற்சாகமும் தரவல்லது. இந்த தில்லானா இசையின் ராக பாவத்திலும் நாட்டியத்தின் பல்வேறு அடவுகளை கொண்டாடுவதிலும்

கலைஞர்களின் தனித்திறனை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இசையில் தில்லானா. இசைக் கச்சேரியில் பல்லவிக்கு பிறகு பாடப்படுகின்ற உருப்பிடிகளில் தில்லானாவும் ஒன்று (2). தில்லானா என்ற உருப்படி பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும். "தரணா, தில்லில்லானா, தனதிரனா, நாதிருதீம்" போன்ற சொற்களால் தாளத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கும்(3). சில தில்லானாக்கள் அனுபல்லவி இல்லாமல் சமஷ்டி சரணங்களை கொண்டிருக்கும். பல்லவி, அனுபல்லவி, சொற்கட்டுடனும், சரணத்தில் சிறிதளவு சாஹித்தியமும் கொண்டு இயற்றப்பட்டிருக்கும். மத்தியம காலத்தில் பாடப்படும் இதன் சாஹித்தியங்கள் இறைபக்தி, குருபக்தி போன்றதாகவோ அல்லது சிருங்கார ரசம் கொண்டதாகவோ அமைந்திருக்கும். சில தில்லானாகலில் வாக்கேய, ராக, தாள முத்திரைகளும் காணப்படுகிறது.

தற்போதுள்ள தில்லானா வடிவம் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து உருவாக்கப்பட்டது. கல்யாணி, தோடி, சங்கராபரணம், சுருட்டி, வசந்தா போன்ற கனமான ராகங்களிலும், காபி, பெஹாக், பிருந்தாவன சாரங்கா, யமுனா கல்யாணி போன்ற ஹிந்துஸ்தானி ராகங்களிளும் கூட சில தில்லானாக்கள் இயற்றப்பட்டிருக்கின்றது. தில்லானாக்களில் இசை அலங்காரங்களான ஸ்வராக்ஷரம், சங்கதிகள் போன்ற பலவும் அமைந்திருப்பது காணமுடிகிறது. இவை தில்லானாவை மேலும் சிறப்புடையதாக்குகிறது. இவை தவிர ராக மாலிகையாகவும் சில தில்லானாகள் காணப்படுகிறது.

**நடனத்தில் தில்லானா**

நாட்டியத்தின் சிறப்பு அதன் அடவுகள், கையசைவு, கண்ணசைவு, பாவம் போன்றவற்றால் கூறப்படுகிறது. அவ்வாறு காண்போரை மகிழ்விக்கும் வடிவமே தில்லானா எனப்படும். சதி என்ற சொல்லை "குடமுழவச் சதிவழியே அனல் கையேந்தி கூத்தாடவல்ல குழனாகி "- என்று அப்பரும், "சரியின் முன்கை நன்மாதர் சதிபட மாநடமாடி"- என்று சம்பந்தரும், "கூடிய இலயம் சதிபிழையாமை கொடியிடை உமையவள் காண"- என்று சுந்தரரும் பாடுவதில் இருந்து நாட்டியத்தில் சதி(ஜதி) என்ற சொல் 1300 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. கிபி அறுநூரில் பல்லவரசன் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப்பிரகசனம் என்ற நூலிலும் திறணா திறணா என்ற வார்த்தைகள் காணப்படுகிறது. அவை தில்லானாக்கு முன்னோடியாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது(4). அதைப் போல 13 ஆம் நூற்றாண்டில் சாரங்க தேவரால் இயற்றப்பட்ட சங்கீத ரத்னாகரம் என்ற நூலில் கர்ண பிரபந்தம் என்ற நடன முறை விளக்கப்பட்டுள்ளது(5). அவை தாள சொற்களால் (ஜதி) இசைக்கு ஏற்ப அமைக்கப்பட்ட ஒரு வடிவமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதுவே பின்னாளில் தில்லானா என்று வளர்ந்ததாகவும் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

நாட்டிய கச்சேரிகளில் பதங்களுக்குப் பிறகு இந்த தில்லானா ஆடப்படுகிறது. இதன் பல்லவி அனுபல்லவி பலமுறை பாடப்படுகிறது. பொதுவில் தில்லானாக்கள் மத்யம காலத்தில் பாடப்படுவதால் அதற்கேற்ப சொற்கட்டு ஜதிகளும் அமைக்கப்படுகிறது. சில வேறுபட்ட தாள நடைகளிலும் தில்லானாகள் உள்ளது. தமிழகத்தின் தஞ்சை நாயக்கர் மன்னர்கள் காலத்தில் உருவான ஹரிகதையில் தில்லானா பாடப்படும் வழக்கமும் உண்டு(5). பஞ்சப்படி பூர்வ பீடிகை முடிந்தவுடன் தில்லானா விருவிருப்பாக பாடப்படுகிறது. சில இடங்களில் கதைக்கேற்ப தில்லானா பாடப்படும்

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

வழக்கமும் உண்டு. ஹரிகதையில் தில்லானாக்கள் விறுவிறுப்பு சேர்த்து நிகழ்ச்சியின் சூழலையே இனிமையானதாக மாற்றக்கூடியதை காண முடிகிறது.

**தில்லானா வாக்கேயர்**

மகாவைத்தியநாதர் இயற்றிய "கௌளி நாயக்க" மிகவும் உயர்ந்த நீண்ட உருப்படியாகும். வீனை சேஷய்யரின் தில்லானாவில் சரணத்தின் முடிவில் ராக மாலிகையாக சொற்கட்டுகள் உள்ளது. சில தில்லானாகளில் சரண சாகித்யம் முடிந்ததும் புதிதாக சொற்கட்டு பகுதி அமைந்திருப்பதும் உண்டு. இவ்வாறாக மைசூர் சதாசிவம், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், சுவாதித் திருநாள் போன்ற பல இசை மேதைகள் தில்லானா இயறியுள்ளார்கள். திரு லால்குடி ஜெயராமன் அவர்கள் பல அற்புதமான தில்லானாக்களை இயற்றியுள்ளார்.

**முடிவுரை**

இசையின் சிறப்பையும் பரதத்தின் சிறப்பையும் எடுத்துக்கூறும் இதுபோன்ற இசை நாட்டிய வடிவங்கள் நமது பாரத நாட்டின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது. தில்லானா இல்லாத இசை நடன கச்சேரி இருப்பதில்லை. நமது பாரம்பரியத்தில் மனம் கமழும் இவ்வகையான கலைப்படைப்புகள் என்றும் அழியாமல் இருக்கும். இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளில் இந்த தில்லானா காண்போருக்கு உற்சாகம் கொடுக்கும் வடிவமாய் என்றும் விளங்கும்.

**அடி குறிப்புகள்**

1- தமிழிசை ஒரு ஆய்வு அரங்கிசை வடிவங்கள்- முனைவர் ராம கவுசல்யா - பதிப்பு 2001 - பக்கம் 158

2- தமிழிசை ஒரு ஆய்வு அரங்கிசை வடிவங்கள் - முனைவர் ராம கவுசல்யா - பதிப்பு 2001 - பக்கம் 161

3- https://www.tamilvu.org/courses/diploma/a061/a0613/html/a0613664.htm

4-https://dhinasari.com/general-articles/15018-%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D.html/amp5- தமிழிசை ஒரு ஆய்வு அரங்கிசை வடிவங்கள்- முனைவர் ராம கவுசல்யா - பதிப்பு 2001 - பக்கம் 158

6- தமிழிசை ஒரு ஆய்வு அரங்கிசை வடிவங்கள் - முனைவர் ராம கவுசல்யா - பதிப்பு 2001 - பக்கம் 161.